Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 28 இதழ் - 12 டிசம்பர் 2015




வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்.
உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.
(சங்கீதம் 65 : 11)

## சென்னை, பாண்டி வெள்ள நிவாரணத்திற்கு எங்கள் சபை மற்றும் ஊழியத்தின் மூலம் எடுத்து செல்லப்பட்ட பொருட்கள்













## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 3
2. ஏன் நாங்கள் கர்த்தருடைய... 11
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 21
6. தங்கள் வயிற்றுக்கே ஊழியம்... 24
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை 29
8. உங்களுடைய பக்தியை... 32


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- **இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.**
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

**- ஆசிரியர்.**

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

**86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.**
**PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 28 December - 2015 Issue - 12**


ஆசிரியர் உரை

## நீ எங்கே இருக்கிறாய்?

**கே**ள்விகள் என்பது மானிடராய்ப் பிறந்த அனைவருக்கும் பொதுவானது. கேள்விகளை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, கேள்விகள் கேட்பது, மற்றொன்று கேள்விகள் கேட்கப்படுவது. அதாவது, நாம் பிறரைப் பார்த்துக் கேட்பது மற்றும் நம்மைப் பார்த்து அடுத்தவர்கள் கேட்பது. இந்தக் கேள்விகளுக்கு வாய் பேச முடியாதவர்கள் கூட விதிவிலக்கு அல்ல. செய்கைகள் மூலமாக அவர்களும் கேள்விகளோடு சம்பந்தப்பட்டவர்களாகவே உள்ளனர். கேள்விகளை இன்னும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, தெரியாத ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்ளும்படியாகக் கேட்பது. இரண்டாவது, ஒன்றைப் பற்றித் தெரிந்திருந்தும் மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அறிந்து கொள்ளும்படியாகக் கேட்பது.

பொதுவாகக் கேள்விகள் மானிடர் சம்பந்தப்பட்டவைகள் தான் என்று பெரும்பாலோர் எண்ணினாலும், கேள்விகளுக்கு சர்வவல்ல தேவனும் அப்பாற்பட்டவராக இல்லையென்பது வேதம் அறிந்தவர் களுக்கு நன்றாகவே தெரியும். ஆயினும், இக்காரியத்தில் தேவனுக்கும், மனிதனுக்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. ஆம், தேவன் பதில் தெரியாதவராக இருந்து ஒரு கேள்வியை ஒருபோதும் கேட்பதில்லை. ஏனெனில், எல்லாவற்றையயும் உண்டாக்கி, எல்லாரையும் அறிந்திருக்கிற அவருக்கு அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு வாய்ப்பே இல்லை. அவர் ஞானத்திலும், பெலத்திலும் வல்லவர் (யோபு12:16).

வருடத்தின் இறுதியில் நமது தலையங்கத்தை அலங்கரிக்கும் கேள்வியானது, சர்வ வல்ல தேவனால் கேட்கப்பட்ட கேள்விகளுள் முதல் கேள்வி. ஆனால், உலக வரலாற்றில் கேள்விகளுக்குத் தாயம் போட்டவன் தந்திரக்காரனாகிய பிசாசு (ஆதி.3:1). ஆம், தனது வஞ்சகக் கேள்வியின் மூலம் பாவத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியவன் அவனே. இந்தப் பிசாசின் தந்திரங்களுக்கு முதலில் ஏவாளும், பிறகு ஆதாமும் அடிபணிந்த போது, தேவன் தன் கட்டளைகளுக்குப் பொறுப்பாளியாகிய ஆதாமைக் கூப்பிட்டு, "**நீ எங்கே இருக்கிறாய்?**" என்று கேட்டு, அடுத்தடுத்து மூன்று கேள்விகளை எழுப்பினார் (ஆதி.3:9). "நீ எங்கே இருக்கிறாய்? " என்ற கேள்வியின் பொருள் "நீ எந்த இடத்தில் இருக்கிறாய்?" என்பதல்ல. மாறாக, " நீ எந்த நிலைமையில் இருக்கிறாய்? " என்பதே

ஏனெனில், உலகெங்கும் காணப்படும் மானிடர் எல்லோருக்கும் ஆதிப்பெற்றோராக இருக்கும் ஆதாமும், ஏவாளும் தேவனால் மாசற்றவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும், அப்பாவிகளாகவுமே படைக்கப்பட்டார்கள். தேவனோடு ஐக்கியம் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர் (ஆதி.3:8). ஆயினும், பிசாசு சர்ப்பத்தின் வாயிலாக அவர்களை வஞ்சித்தான் (II கொரி.11:3,14; வெளி.12:9;20:2). தேவன் கொடுத்த தெளிவான கட்டளையை (ஆதி.2:17) அப்பட்டமாக மீறி, பிசாசின் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து பாவிகளானார்கள். இதன் மூலம் தேவனால், அழகானதாகவும், நன்றாக இருக்கும்படியாகவும் படைக்கப்பட்ட உலகத்தில் பாவத்தோடு, வருத்தம், வியாதி, பாடு, வலி, வேதனை, மரணம் என்று எல்லாமே வந்து சேர்ந்துகொண்டது. இவைகளனைத்தும் தேவ வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதால், ஆதிப்பெற்றோரால் நமக்குத் தானமாக வழங்கப்பட்ட சொத்துக்கள். பரம்பரை சொத்தை வேண்டாமென்றா சொல்லமுடியும்? அனுபவித்துத்தானே ஆகவேண்டும், அது தான் நன்றாக அனுபவிக்கிறோம்.

நீ எங்கே இருக்கிறாய்? அல்லது என்ன நிலைமையில் இருக்கிறாய்? என்று தேவன் கேட்டதற்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு, ஆம், தேவ கட்டளையை மீறிய ஒரு பாவி, ஆவிக்குரிய ரீதியில் தான் எங்கே இருக்கிறேன் மற்றும் எப்படி இருக்கிறேன் என்று அறியாத பட்சத்தில் ஒருபோதும் தேவனிடத்தில் திரும்பி வரவே முடியாது. தன்நிலை உணர்வதற்கும் மறுபடியும் தேவனண்டை வந்து சேர்வதற்கும் அது மிகவும் முக்கியம்.

" தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசன் " (அப்.13:22) என்று தாவீதை வேதம் வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கான காரணம், அவன் தன் பாவ நிலையை உணர்ந்து கொண்டு, " **நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்** " என்று பகிரங்கமாக ஒத்துக் கொண்டது தான் (II சாமு.12:13). மாத்திரமல்ல, தகப்பனை விட்டுத் தன்னிச்சையாகப் பிரிந்து, தான்தோன்றித் தனமாக வாழ்ந்தவனைத் தகப்பன் தூரத்திலே கண்டு, மனதுருகி ஓடி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தஞ்செய்து ஏற்றுக்கொண்டதற்குக் காரணம், இளைய குமாரன் தன் நிலையை உணர்ந்து, " தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்......" (லூக். 15:21) என்று ஒத்துக்கொள்ளும் மனநிலையைப் பெற்றுக் கொண்டது தான். ஆம், தேவனண்டை சேர்வதற்குத் தன்நிலை உணர்வது அவசியம்.

" நீ எங்கே இருக்கிறாய்? என்று தேவன் கேட்ட கேள்வியிலிருந்து நாம் அறிகிற ஓர் உண்மை." அவன் இருக்கவேண்டிய இடத்தில் இல்லையென்பது மற்றும் இருக்கவேண்டிய நிலையிலும் இல்லையென்பது. இக்கருத்தை ஆதாரமாக வைத்து, வருடத்தின் இறுதி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் நமக்கான சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

### I *ஆதாம் ஒளிந்து கொண்டிருந்தான்*

" நீ எங்கே இருக்கிறாய்? " என்ற தலைப்பை ஆதாரமாக வைத்து நாம் முதலில் பார்க்க இருப்பது ஆதித் தகப்பனாகிய ஆதாம் ஒளிந்து கொண்டிருந்தது பற்றியது.

தேவன் கொடுத்த எச்சரிப்பைத் துச்சமென மதித்து, மனைவி சொல்லே மந்திரம் என்று எண்ணி, வேண்டாம் என்று விலக்கின கனியைப் புசித்து பாவம் இவ்வுலகில் புகுந்து குடியேறக் காரணமானான் இந்த ஆதாம். நன்மை, தீமை அறியத்தக்க கனியைப் புசித்ததினால், இருவருடைய கண்களும் திறக்கப்பட்டு, தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்துத் தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள். (ஆதி. 3:7)

பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டபோது ஆதாமும், அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்

(ஆதி.3:8). தாங்கள் நிர்வாணிகளாக இருப்பதால் இப்படி அவர்கள் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி ஒளிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவர்கள் நிர்வாணிகளாக இருப்பது இவர்களுடைய தவறு அல்ல. தேவன் இவர்களை நிர்வாணிகளாகத்தான் படைத்தார். ஆயினும், விலக்கப்பட்ட கனியைப் புசித்து இவர்கள் யார் என்பதை அறிந்துகொள்ளும் அறிவைக் கொடுத்தது. பொதுவாக, பாவம் எந்தெந்த வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. எச்சரிக்கையாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒளிந்து கொண்டும், மறைந்து கொண்டும், பதுங்கிக் கொண்டும் நான் காலத்தைக் கழிக்க வேண்டும்.

ஒருவேளை ஒளிந்து, மறைந்து கொள்வதன் மூலம் மனிதர்களை ஏமாற்றும்படியாய் படுசாமர்த்தியமாகக் காய் நகர்த்தலாம். ஆயினும், எல்லாம் வல்ல தேவனை ஏமாற்ற முடியாது. அங்கே ஆதாம் தப்புக்கணக்குப் போட்டுவிட்டான். தேவனுடைய சமூகத்திற்கு விலகி யாராலும் எங்கும் ஓடிப்போய் தப்பித்துக் கொள்ளமுடியாது. இது குறித்து, பகிரங்கமாகப் பாவம் செய்து, வசமாக மாட்டிக் கொண்ட தாவீது கூறுவதைப் பாருங்கள்; **“ இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது. உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர் ”** ( சங்.139:6-8)என்று. இன்னும், புதிய ஏற்பாட்டு எழுத்தாளனாகிய எபிரெயர் ஆசிரியர் இந்த உண்மை குறித்து **“ அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும்; வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் ”** (எபி.4:13)என்கிறார்.

அப்படியானால், அருமையானவர்களே! நம்முடைய பக்தி வாழ்க்கையில் நாம் எங்கே இருக்கிறோம்? எந்த நிலைமையில் இருக்கிறோம்? வருடத்தின் இறுதியில் இருக்கும் நாம் இதுபற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆதிப் பெற்றோரைப் போன்று தேவன் கொடுத்த கட்டளையை மீறி, தேவப்பிரசன்னத்திற்குப் பயந்து, ஒளிந்து வாழ்ந்து கொண்டுள்ளோமா? அல்லது தேவ பயத்தோடு அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நீதியாய் வாழ நம்மை ஒப்புக்கொடுத்து நடந்து கொள்கிறோமா ?

## II எரேமியா காலத்து மக்கள் எதிர்த்து நின்றார்கள்

" நீ எங்கே இருக்கிறாய் " என்ற தலைப்பை ஆதாரமாக வைத்து நாம் இரண்டவது பார்க்க இருப்பது, எரேமியா காலத்து மக்கள் எதிர்த்து நின்றார்கள் என்பது பற்றியது.

தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் இருண்ட காலத்தில் தீர்க்க தரிசனம் உரைத்த ஒரு மகா தீர்க்கன் இந்த எரேமியா. ஆசாரியப் பட்ட ணம் என்றழைக்கப்பட்ட ஆனதோத்தைச் சேர்ந்த இவன், தன் இளம் வயதில் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டான். இருதயத்தை எட்டிப்பிடிக்கக்கூடிய செய்தியை உடைந்த உள்ளத்தோடு பிரசங்கித்து, யூதாவின் வணங்காக்கழுத்துள்ள மக்களுக்கு எதிராக எதிர்வரும் அழிவைக் குறித்து எச்சரித்துப் பிரசங்கம் செய்தான். இதனிமித்தம் இவனை அவர்கள் உதாசீனம் செய்ததோடு, துன்புறுத்தவும் தொடங்கினர். யூதாவை ஆண்ட நல்ல ராஜாக்களில் கடைசி ராஜா வாகிய யோசியா செய்த நற்காரியங்கள் மற்றும் எரேமியாவின் எச்சரிப் புகள் என்று எதுவும் இவர்களை மனமாற்றத்திற்குள்ளாக நடத்தி தேவன் பக்கமாகத் திருப்ப முடியவில்லை. சொல்லப்போனால், பின்மாற்றம் என்பது படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்தது. எரேமியா காலத்து மக்களின் இந்தப் பொல்லாத நிலையைத் தேவன் எப்படி இடித் துரைக்கிறார் பாருங்கள்," **பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: யூதா என்கிற துரோகியைப் பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவன் தன்னை நீதியுள்ளவனாக்கினாள்** " என்று ( எரே.3:11)

இவர்களின் இந்த இழி குணம் குறித்து வேதத்தின் நிலைப்பாட்டைக் கவனியுங்கள். " **வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள். நான் உங்கள் மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்திற்குச் செவி கொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ, நாங்கள் கேட்க மாட் டோம் என்கிறார்கள்** " (எரே.6:16,17). அதுமட்டுமா?.... "**தங்கள் முகங்களைக் கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாக்கி, திரும்ப மாட்டோம்**" என்கிறார்கள் (எரோ.5:3). மொத்தத்தில் இவர்கள் "மாட்டோம்" என்ற வார்த்தையின் மறுபெயராக வாழ்ந்தார்கள்.

அருமையானவர்களே, எரேமியா காலத்து மக்களைக் குறித்து வசைபாடுவதை அப்படியே கொஞ்சம் நிறுத்திவிட்டு, வருடத்தின்

இறுதி நாட்களிலே நின்று கொண்டிருக்கும் நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் எங்கே நின்றுகொண்டிருக்கிறோம் என்று எண்ணிப் பார்ப்போம். தேவ ஆலோசனைகளைத் தள்ளுகிறவனாகவும், தேவ எச்சரிப்பை மீறுகிறவனாகவும் நான் இருக்கிறேனா? என்று ஒவ்வொரு வரும் சிந்திப்போம். தேவ ஆலோசனையைத் தள்ளுவது நமக்கு ஒருபோதும் நன்மையைத் தராது. யோவான் ஸ்நானனுடைய நாட்களில், " **பரிசேயரும், நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்** " (லூக்கா 7:30). எரேமியா காலத்து மக்கள் தேவ ஆலோசனைகளையும், எச்சரிப்புகளையும் தள்ளி எதிர்த்து நின்றதால், தேவனுக்கு எந்த நட்டமும் இல்லை. மாறாக, இவர்கள் தான் அடிமைகளாக பாபிலோனுக்குக் கொண்டுபோகப் பட்டு அல்லல்பட்டனர்.

தேவனுடைய ஆலோசனையைத் தள்ளுவதும், எதிர்ப்பதும் ஒருவனைக் கேட்டிலேதான் கொண்டுபோய் நிறுத்தும். அப்படி தேவ ஆலோசனை என்பது என்ன? சிலுவைக்குப் பின்னால் வாழும் நமக்கு தேவ ஆலோசனைகளாக எது கொடுக்கப்பட்டுள்ளது? இதை அறிந்து கொள்ள, பவுலடியடி எபேசு பட்டணத்து சபை மூப்பர்களிடம் பேசின வார்த்தைகளைக் கவனியுங்கள். அப்.20:20ல் "**பிரயோஜனமான வைகளில் ஒன்றையும் உங்களுக்கு மறைத்து வைக்கவில்லை**" என்று கூறினதோடு, அப்.20:26ல் "**தேவ ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்கவில்லை**" என்று கூறுகிறார். அப்படியே தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறவர், அப்.20:32ல் "**.... அவரு டைய கிருபையுள்ள வசனத்துக்கு உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்**" என்றார். ஆக, இவைகளை எல்லாம் இணைத்துப் பார்க்கும் போது தெரிவது என்ன? **நம்முடைய பக்தி வாழ்க்கைக்குப் பிரயோஜன மாயிருக்கும் தேவ ஆலோசனைகள் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகள் தான்.** கிறிஸ்துவால் போதிக்கப்பட்டு, அப்போஸ் தலர்களால் உபதேசிக்கப்பட்ட இந்தக் கிருபையுள்ள வார்த்தைகள டங்கிய புதிய ஏற்பாட்டைத் தான் யாக்கோபு ஆசிரியர் "**சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம்**" என்று கூறுகிறார் ( 1:25 ). அத்தோடும் அவர் நில்லாமல், ஒருபடி மேலேசென்று, "**சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற் கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்**" என்றாள் ( 2:12). இன் னும் " இந்த நியாயத்தீர்ப்பு" என்னுடைய வசனத்தின்படி தான் என்று இயேசு ஆண்டவர் யோவான் 12:48 ல் வெளிப்படுத்தியுள்ளார்.

நியாயத் தீர்ப்பைக் கடந்துதான் பரலோகில் அடியெடுத்து வைக்க முடியும். அந்த நியாயத்தீர்ப்பு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படிதான் நடக்கும். அதன்படி மாத்திரம் செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். மீறிச் செய்கிறவர்களாக இருந்தால், எரேமியா காலத்து மக்களைப் போல எதிர்த்து நின்று, ''நடக்கமாட்டோம்'', ''கேட்க மாட்டோம்'' ''திரும்பமாட்டோம்'' என்று முரண்டு பிடிக்கிற வர்களாகவே தேவனுடைய பார்வையில் காணப்படுவோம். ஆம், பக்தி ரீதியாக நாம் செய்கின்ற ஒவ்வொன்றும், குறிப்பாக இன்றைய நாட்களில் உலகெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தால் விமரிசையாகக் கொண்டாடப் படுகின்ற '' பண்டிகை '' உட்பட எதுவாக இருந்தாலும் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படிதான் இருக்க வேண்டும். ஆகவே, நம்முடைய பக்தி வாழ்க்கையில் ''நாம் எங்கே இருக்கிறோம் ? '' என்று தீர்மானிப்போம்.

III *பவுல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இருந்தார்*

" நீ எங்கே இருக்கிறாய் '' என்ற தலைப்பை ஆதாரமாக வைத்து நமக்குக் கிடைக்கின்ற இன்னுமொரு பாடம், அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இருந்தார் என்பது.

ஆம், அப்போஸ்தலனாகிய பவுல் தேவ கட்டளையை மீறி ஒளிந்து கொள்ளவுமில்லை, தேவ ஆலோசனையை எதிர்த்து வீணாகிப்போகவுமில்லை. மாறாக, ''**நடுங்கித் திகைத்து**'', **ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாக இருக்கிறீர்?**'' (அப்.9:6) என்று கேட்டு, பக்தியுள்ள வனும், சகல யூதராலும் நல்லவனென்று நற்சாட்சி பெற்ற (22:12) அனனியா என்னும் சீடனாலே, தனக்கான தேவசித்தம் இன்னதென்றும், அவன் இரட்சிப்புக்கான தேவ ஆலோசனை எதுவென்றும் அறிந்து கொண்டு (அப்.22:10,14,15) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு (22:16), கர்த்தராலே அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார் (அப்.2:47 ).

ஒரு காலத்தில் வைராக்கியமுள்ள யூதனாக இருந்த நான், இப்ப டித்தான் மனமாற்றமடைந்து **கிறிஸ்துவின் சபைக்குள்ளாக வந்தேன்** என்பதையும், இது போன்று தான் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி போதிக்கப்பட்டுக் கீழ்ப்படிந்த அனைவரும் ''கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளாக'' வந்தார்களென்பதையும் மனதில் கொண்டவராய், கொரிந்தியருக்கு எழுதும்போது ''**நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லா ரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்** '' (I கொரி. 12:13 ) என்று கூறினார்.

ஆனால், அருமையானவர்களே! " நீ எங்கே இருக்கிறாய்? " என்ற தலைப்பின்படி சபை காரியத்தில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டாமா? நாம் எங்கே இருக்கிறோம் என்பது நம்முடைய நித்திய வாழ்க்கையைத் தீர்மானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. மத்தேயு.25-ம் அதிகாரத்தில் இயேசுவால் காட்டப்பட்ட நியாயத்தீர்ப்புக் காட்சியை நம்முடைய கண்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்திப் பார்ப்போம். கூட்டிச் சேர்க்கப்பட்ட சகல ஜனங்களையும் பக்திச் செயல்பாடுகளினடிப்படையில் வலது, இடம் என்று பிரித்து, வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து,**"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே ! "** ( மத்.25:34 ) என்றும், இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து, " **சபிக்கப்பட்டவர்களே "** (மத்.25:41) என்றும் குறிப்பிட்டார். ஆம், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் தீர்மானிப்பது, நாம் எங்கே இருக்கிறோம் என்பது தான்! நினைவிலிருக்கட்டும்.

இது போன்று தான் சபை சம்பந்தப்பட்ட காரியமும். ஆம், நாம் எந்தச் சபையில் அங்கம் வகிக்கிறோம் என்பது முக்கியம். எந்தச் சபையில் வேண்டுமானாலும் இருந்து கொள்ளலாம், பக்தியாய் இருந்தால் போதும் என்று நினைப்போமானால், நாம் தவறு செய்கிறவர்களாகவே இருப்போம். பவுலடியாரும், அப்போஸ்தலர்களும், ஆதித் திருச்சபை மக்களும் இருந்தது **கிறிஸ்துவால் கட்டப்பட்ட ஒரே சபையில் தான் ( எபே.4:4 ).** கிறிஸ்துவின் சபையல்லாத மற்ற எல்லா சபைப்பிரிவுகளும் கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாதவைகள். பரமப்பிதாவால் நடப்படாமல், மனித ஞானத்தின் படியாகவும், கூட்டு முயற்சியின்படியாகவும் சரித்திரத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும், உலகின் வெவ்வேறு பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டவை. ஆயினும் பரமப்பிதாவால் நடப்படாத எல்லாம் வேரோடே பிடுங்கப்படும் ( மத்.15:13).

வருடத்தின் இறுதி நாட்களிலே நின்று கொண்டிருக்கும் நமக்குப் புதிய ஆண்டைக் குறித்த சிந்தை மாத்திரம் இராமல். அதைத் தாண்டி, நியாயத்தீர்ப்பு, பரலோகம் பற்றிய சிந்தையும் இருக்கவேண்டும். பரலோக பாக்கியத்துக்கு கிறிஸ்துவால் வாக்களித்துக் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபையில் நாம் இருக்கிறோமா என்பது மிகவும் முக்கியம், முக்கியம், முக்கியம்.

ஆகவே, தேவனும், அவருடைய குமாரனும் பிரியப்படும் ஓர் ஒப்பற்ற பக்தி வாழ்க்கையைப் புதிய ஆண்டில் நாம் நடத்தவும் அதற்குத் தடையாக இருக்கும் எல்லாவற்றையும் தகர்த்தெறியவும் தீர்மானித்துச் செயல்படுவோமாக!

**அனைவருக்கும் ஆசானின் புத்தாண்டு வாழ்த்துக்கள் !**

# ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்?

## J.C. சோட்

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் பற்றி வேத வசனங்கள் நிறைய இடங்களில் பேசுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் கவனிப்போம். முன்பொரு காலத்தில் யோவேல் இப்படியாக தீர்க்கதரிசனம் உரைத்தார், '' அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். மேலும் ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டு வேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெ வனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும், எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப் பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயியிருக்கும்'' (யோவேல் 2:28-31).

பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு, அவர்கள் பற்பல மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்; அங்கே கூடியிருந்தவர்கள் அப்போஸ்தலர்களால் எப்பஜ இப்படிப் பேச முடிகிறது என்று சொல்லி வித்தியாசமான முடிவுகளுக்கு வந்தார்கள். சிலர் அப்போஸ்தலர்கள் மதுபானத்தினால் நிறைந்திருந்ததாக எண்ணினார்கள். அதன் பின்பு நாம் இப்பஜ வாசிக்கிறோம். '' அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள்

வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர்கள் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழபூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகி அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும், பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார் ( அப்போஸ்தலர் 2:14-21)

வெகு காலத்துக்கு முன்பு யோவேல் உரைத்த தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் நிறைவேறியதில் கிறிஸ்துவின் மரணம், பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல், இரட்சிப்பின் வருகை ஆகிய இவைகள் சம்பந்தப்பட்டுள்ளதென்பது வெளிப்படையாக உள்ளது. இவைகள் எல்லாம் கடைசி நாட்களில், கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்து வந்த அந்த நாட்களில் நிறைவேறியது. எபிரெய எழுத்தாளர் கடைசி நாட்களில் தேவன், தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம் பற்றுவார் என்று சொன்னார் (எபிரெயர் 1:1,2). அந்த ஆதிநாட்களில் கிறிஸ்து அப்போஸ்தலர்கள் மூலமாக திருவுளம் பற்றினார். அதன் பின்பு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிபபடுத்தப் பட்டிருக்கிற தம்முடைய வார்த்தைகள் மூலமாக நம்மிடம் பேசிக் கொண்டிருக்கிறார். பவுல் தான் பிரசங்கித்தவைகளைப் பற்றிச் சொல்லும் போது, '' நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்'' (கலாத்தியர் 1:12) என்கிறார். யோவான் பார்த்தவைகளைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவின் சாட்சியைக் குறித்தும் அவர் சொல்லும் போது, ''இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது'', (வெளி. 1:3).

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிப்பதற்காக இயேசு செய்த அற்புதங்கள் பற்றியும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும் ஆட்சி செய்வதற்கு பிதாவினிடத்தில் திரும்பிப் போவது குறித்தும் பிரசங்கித்தார்கள். இவைகளைக் கேட்டு ஏறக்குறைய மூவாயிரம் பேர் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்டு தாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என அறிய விரும்பின போது, இப்படியாக அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டது. " பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்போஸ்தலர் 2:38-42).

- தொடரும்

## எத்தனை நாட்கள் ஆகியிருக்கிறது...

- ★ நேரம் எடுத்து தனியாகயிருக்கும் ஒருவரைப் போய் சந்தித்து?
- ★ உங்கள் மனதில் தோன்றிய ஒருவருக்கு கடிதம் எழுதி?
- ★ வேதத்தை வாசிக்க முடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவருக்கு வேதத்தைப் போதித்து?
- ★ கிறிஸ்தவராகயிருப்பதனால் உபத்திரவப்படும் ஒருவரை உற்சாகப்படுத்தி?
- ★ விசுவாசத்தில் பலவீனமானவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்து?

பெண்கள் பகுதி

# பாடுகளின் மத்தியில் நான் எப்படி?

சகோ. ரேச்சல் நாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இந்த வருடம் முழுவதும் நம்மை காத்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். வாக்கு மாறாத உண்மையுள்ள தேவன் தம் பங்கில் நமக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. முழுமையும், பூரணமும் நிறைந்த நம் தேவன் வேண்டியவைகள் அனைத்தையும் நமக்கு வேதத்தின் வழியாக வழங்கியுள்ளார். அவருக்கு சதாகாலங்களிலும் மகிமையும், கனமும், துதியும் உண்டாவதாக!!! பூரணத்தைப் பெற்றுக் கொண்ட நாம் நம் பங்கில் அவருக்குத் திரும்பக் கொடுக்கும் வகையில் நம் பங்கு, நம் மனது, நம் செயல்பாடு எப்படியுள்ளது? நம்மை நாம் சோதித்து அறிந்து உண்மையை ஒத்துக் கொள்ள தேவன் உதவி செய்வாராக!

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அடிக்கடி தன்னைப் பார்த்துக் கேட்டுக் கொள்ளக் கூடிய கேள்வி ஒன்றுள்ளது. நமக்கோ, நம் குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ பிரச்சனை, பாடுகள் என்று வரும்போது நம் நிலை எவ்வாறு உள்ளது? அனுபவித்தாலன்றி இதற்கு சரியான பதிலைக் கூறுவது சற்று கடினம். வழக்கம்போல முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களிடம் சென்றுதான் பதிலை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டமானது சொல்லிக்கொள்ளும் அளவுக்கு கஷ்டமில்லாததாகவும், சரீரத்திலும், ஆவியிலும் அனுகூலச் சூழ்நிலையில் தான் இருக்கிறோம். நாம் யாரும் பசியால் வாடுவதில்லை. நம்மை யாராவது வந்து தாக்கிவிடுவார்கள் என்று அஞ்சவேண்டிய நிலையிலும் இல்லை. எந்த சிரமமும் இன்றி எப்பொழுது வேண்டுமானாலும் நாம் அவரைத் தொழுது கொள்ளலாம். வேதாகமம், வேதாகமம் சார்ந்த நூல்கள், விளக்க புத்தகங்கள், அஞ்சல் வழி பாடங்கள், கைப்பிரதிகள், இணைய தள வசதி என்று அடிக்கிக் கொண்டே போகும் அளவுக்கு தேவனுடைய வார்த்தைகளுக்கான வசதிகள் பெருகியுள்ள காலம் இது. தேவனுடைய அன்பும், கிருபையும் அளவில்லாமல் நமக்குக் கிடைக்கிறது.

பரலோகப் பிதா தம்முடைய பிள்ளைகளுக்கு ஆசீர்வாதங்களை அளவில்லாமல் பொழிந்து கொண்டிருக்கிறார். இந்த வேளையிலே, இஸ்ரவேல் ஜனங்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் முன் தேவன் கொடுத்த எச்சரிப்பை நாம் நினைவில் கொள்வது மிகவும் நல்லது.

**உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும், நியாயங்களையும், கட்டளைகளையும், கைக்கொள்ளாமற்போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. உனக்கு நன்மை செய்யும் பொருட்டு....... தேள்களும் தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்திர வழியாய் உன்னை அழைத்து வந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப் பண்ணினவரும், உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னை போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும்........**( உபா.8:11-19 ) என்று.

அருமையானவர்களே, இந்த எச்சரிப்பானது இன்றைக்கு வாழும் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் பொருத்தமானதாக இருக்கிறதென்பது வருத்தமானதாக இருக்கிறது. ஆரோக்கியமான உபதேசம் என்பது சுலபமாகத் தள்ளப்பட்டு, ஏதோ, வேதாகமம் ஒரு சரித்திரப் பாடம் போன்றும், வாழ்க்கையின் நீதி போதனைகளுக்கு ஒரு வழி காட்டும் புத்தகம் போன்றும் பார்க்கப்படுகிறது. இரட்சிப்பிற்கான போதனைகள், புதிய ஏற்பாட்டு ஆராதனை முறை, சபையின் ஒருமைப் பாடு, திருமணம் போன்ற காரியங்கள் என்று வரும்போது அமைதியாக இருந்து நம் விருப்பம் போல் செயல்பட்டு விடுகிறோம். மேலும், நம்மோடிருக்கும் ஆவிக்குரியவர்களையும், பெலவீனமான கிறிஸ்தவர்களையும் புண்படுத்தக் கூடாது என்று எண்ணி சத்தியத்தில் அமைதிகாத்து விடுகிறோம். மேலும், சிலரது அமைதியானது சத்தியத்தோடு சமரசம் செய்வதற்கும், பிரிவினைச் சபையாரோடு நேர்ந்து கலந்துகொள்ளவும், இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் அனைவரையும் உண்மை சபையின் அங்கத்தினராகப் பார்க்கச் செய்து விடுகிறது. இப்படி பலவகை அமைதியானது தேவனுடைய வார்த் தைகளைப் பற்றிய உண்மையை முழுமையாக அறியவிடாமல் செய்து அஸ்திபாரமே இல்லாத ஒன்றின்மேல் நிற்கச் செய்து விடுகிறது.

இயேசு கிறிஸ்து உலகில் பிரசங்கித்த நாட்களில் இப்படிப் பட்டவர்களை " **தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால்,**

**கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள். வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள் ''** (மாற்கு : 4:17) என்று போதித்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையைக் குறித்த அடிப்படை அறிவு இல்லாதபடியாலும் நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விசுவாசத்தில் ஆழமான பிடிப்புள்ளவர்களாக இல்லாதபடியாலும் அநேக கிறிஸ்தவர்கள் தங்களுக்கு எதிராக வரும் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியாமல் தடுமாறுகிறவர்களாக உள்ளார்கள்.

மேற்கண்ட வசனப்பகுதியில் இயேசு கிறிஸ்து கற்பாறை நிலத்தைப் போன்ற இருதயம் உள்ளவர்களைப் பற்றிப் பேசுகிறார். இந்த இருதயம் பற்றிய பிரச்சனை என்ன? ஆவிக்குரிய வேர் இல்லை. தேவனுடைய வார்த்தை ஆழமாக உள்ளே செல்ல இம்மனிதன் அனுமதிப்பதில்லை. இயேசு இவர்களைப் பற்றி என்ன சொல்கிறார்? வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள். தேவனுடைய வார்த்தை நம் இருதயத்தில் ஆழமாகப் பதிந்து வேர் கொள்வதற்கு நீங்களும், நானும் என்ன செய்ய வேண்டும்? இது ஒரு அனுதின முயற்சியாகும். தினமும் வேதம் வாசிக்க வேண்டும். ஆனால் அதுமட்டும் போதாது. அதைப்பற்றி ஆழமாக, நிதானமாக நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நம் வாழ்க்கையோடு எப்படி பொருத்த வேண்டுமென்று நினைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் இந்த தேவ வசனத்தை ஆழமாகப் பதிய வைத்து நம் வாழ்க்கையை அது மாற்றச் செய்ய வேண்டும். அதன் பிறகுதான் நாம் ஆவிக்குரிய ஆழமான வேர்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதன்பிறகு தான் இந்தக் கற்பாறை நிலத்தில் விழுந்த இதயத்தைப்பெற்ற மனிதன்போல் இடறலடைய மாட்டோம். அப்பொழுதுதான் சோதனை, உபத்திரவம், பாடுகள் என்று வரும்போது இடறலடைந்து விழுந்து விடாமல் இருப்போம்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இந்த வருடத்தின் இறுதியில் நின்றிருக்கும் நாம் ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய முக்கியமான கேள்வி '' பாடுகளின் மத்தியில் நான் நிலைத்திருக்கிறேனா? '' வேத வசனத்தின் துணைகொண்டு நாம் நிற்போம். கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை யார் பிரிப்பது? (ரோமர்.8:35...) எதுவும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு விலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டா தென்று நிச்சயித்துக் கொண்டு, வருகிற புத்தாண்டுக்குள் அடியெடுத்து வைப்போம். ஆமென்! ●

வாலிபர் பகுதி

# எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்க

பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிப உள்ளங்களுக்கு கர்த்தராகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வுலகில் நாம் ஒருவருக்கொருவர் நலம் விசாரிப்பதை வழக்கமாக பழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நாம் நம் உறவினர் களையோ நண்பர்களையோ தெரிந்தவர்களையோ நேரில் காணும் போதோ, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதோ நலம் விசாரிக்கிறோம். அப்படிச் செய்யும்போது பெரும்பாலும் நாம் உடல் நலன்பற்றித்தான் விசாரிக்கிறோம். மனநலன்பற்றி விசாரிப்பதில்லை. ஒருவர் நோயே இல்லாமல் இருப்பது மட்டும் அவர் ஆரோக் கியமாக இருக்கிறார் என்பதற்கான அடையாளமோ, அளவுகோலோ அல்ல. ஒருவருடைய மனநலம் நன்றாக இருக்கும் போது மட்டுமே அவர் முழுமையான ஆரோக்கியமுள்ள மனிதனாக மாறுகிறார். இன்றைய நாட்களில் பலர் குடும்பச்சூழல், சுற்றுச்சூழல் மற்றும் வேலைச்சூழல் காரணமாக மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இச்சீர்குலைந்த சமுதாயம் இவர்களை சமமாக நடத்தாமல், இவர்களோடு நெருக்கமாகப் பழகாமல் வெறுக்கிறது. உடல் நலம் குன்றி விட்டால் மருந்து மாத்திரைகள் என பல வழிகள் உண்டு. ஆனால், மனநலம் குன்றிவிட்டால் வழி என்ன? தேவன் வழியை வேதாமத்தில் வைத்திருக்கிறார். மனிதனுக்காக எழுதப்பட்ட மிகச்சிறந்த புத்தகம் வேதாகமம் தான். இதை வேதாகமத்தின் வார்த்தைகள் மறுபடியும் மறு படியும் நிரூபிக்கின்றன. வேதாகமம் மனித வாழ்க்கைக்கான வழிக் காட்டி புத்தகமாகத் திகழ்கிறது. நாம் எப்படி ஒரு வீட்டு உபயோகப் பொருளைப் பற்றிய முழுமையான விவரத்தை அறிந்து கொள்ள வழிகாட்டிப் புத்தகத்தை பார்க்கிறோமோ அதுபோல் நம்மைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள

வேதாகமத்தைப் பார்க்க வேண்டும். மனித நலனுக்காக தேவன் வேதாகமத்தில் வைத்திருக்கும் காரியங்களை விட தத்துவ ஞானிகளின் கைவசம் அதிக தத்துவங்கள் இருக்கிறது என்று யாரும் பெருமைப்பாராட்ட முடியாது. அதுவும் குறிப்பாக பிலிப்பிநி நிருபத்தில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை விட மனித நலனுக்கான வேத வசனங்கள் வேறெங்கும் இல்லை.

பவுல் இந்நிருபத்தை, தனக்குப் பொருளாதார நன்மைகளை கொடுத்தனுப்பிய பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நன்றி செலுத்து வதற்காக எழுதினார். ( பிலிப்பியர் 1:45; 4:18). அந்தச் சபையர் எப் பாப்பிரோதீத்து மூலமாகப் பொருளாதார உதவிகள் சிறையிலிருந்து பவுலுக்குக் கொடுத்தனுப்பினார்கள். ஆனால், எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையைப் பற்றிய கூடுதல் தகவல்களையும் கொண்டு வந்தார். அப்பட்டணத்து சபையார் பவுலின் சிறைவாசத்தைக் கேள்விப்பட்டு அதிகமாகக் கவலைப்பட்டார்கள் (1:30). பவுல் தனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷகம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று அவர்களுக்குத் தெரியப்படுத்தியதின் மூலமாக அவர்களை ஆறுதல் படுத்தினார். அவர்கள் தன்னைப்பற்றி கவலைப்பவதைவிட்டு விட்டு தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபட வேண்டும் என்பதற்காக பவுல் அவர்களை அவ்விதமாக ஆறுதல்படுத்தினார். அவர்கள் வேத சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்ய வேண்டிய காரியங்களை பிலிப்பியர் நான்காம் அதிகாரத்தில் விளக்குகிறார். அதிலிருந்து நாம், மனநலம் பற்றி தேவன் சொல்லியிருக்கிற நான்கு வகையான பயிற்சிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

**I. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும்**

இது மனரீதியான ஓர் உடற்பயிற்சியாகும். ஒரு கிறிஸ்தவன் மகிழ்ச்சியாயிருந்து தேவனிடத்தில் எல்லாவிதத்திலும் நன்றியுள்ள வனாயிருக்கப் பல காரணங்கள் உண்டு. நமக்காகக் கிறிஸ்து செய்த தியாகம் இவ்வுலகில் அதைவிட முக்கியமுடிவை எடுக்க நம்மைத் தூண்டி மகிழ்ச்சி அடையச் செய்ய வேண்டும். ஆனால் கிறிஸ்தவர் களாகிய நாம் பெரும்பாலும் உலகக் கவலைகளும், மனச் சோர்வுகளும் நம் மகிழ்ச்சியை மங்கச் செய்ய அனுமதித்து விடுகிறோம். இவ்வுலகில் ஒருவர் சோகத்தின் உச்சகட்டத்திற்குச் செல்லும் போது மனோதத்துவ நிபுணர்கள் அவர் சிரித்து மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த ஆலோசனை ஆரம்பத்திலேயே வேதாகமத்தில் தேவனால் வெளிபடுத்தப்பட்டி

ருக்னுறது. மனோதத்துவ நிபுணர்கள் நாங்கள் புதிதாக கண்டுபிடித்துவிட்டோம் என்று மெச்சிக்கொள்ள ஒன்றுமில்லை.

## II. நம் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரியவேண்டும்

'' சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் ''என்று மலைப்பிரசங்கத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கான ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார். கோபப்படுவது எரிச்சலடைவது பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்வதெல்லாம் உலகத்தாருடைய குணாதிசயங்கள். இவைகள் நம் சரீர உறுப்புகள் பாதிப்படைய காரணமாகின்றன. கோபப்படுவதினால் உடலில் அழுத்தம் அதிகமாகி அது பல்வேறு நோய்களுக்கு வழிவகுக்கின்றன. கோபத்தில் யோசனையின்றி ஒரு நிமிடத்தில் செய்யும் செயல் ஒரு மனிதனுடைய வாழ்க்கையையே வியர்த்தமாக்கிவிடுகிறது. நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். (பிலிப்பியர் 4:11). நம் சாந்த குணம் எல்லோருக்கும் தெரிந்து அவர்கள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். நாம் எதற்கும் பதட்டப்படாமல் கோபப்படாமல் சாந்தமாக இருக்க வேண்டுமென்றுதான் மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். இதுவும் அதாவது, இந்த ஆலோசனையும் தேவனாலே முன்பே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஒன்றுதான்.

## III. நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் இருக்க வேண்டும்

இது மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் நாம் செய்யவேண்டிய உடற்பயிற்சியாயிருக்கிறது. கவலை என்பது நம் வாழ்க்ய, பயணத்தில் அழையா விருந்தாளியாக வந்து நம்மை நிலைகுலையச் செய்கி றது. இவ்வுலகில் நாம் வாழத்தேவையானவைகள் எவைகள் என்பது நம்மைவிட தேவனுக்கு நன்றாகத் தெரியும். முதலாவது, நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது தேவைகளை தேவன் சந்திப்பார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மத். 6:25-34). உலகக் கவலைகள் நம்மை நெருக்கும்போது அவைகளை நம் மனதை விட்டகற்றி தேவ காரியங்களில் கவனத்தைச் செலுத்துவோம். தேவகாரியங்கள் என்று வரும்போது நாம் தேவனுடைய வசனங்களைத் தியானிக்கலாம். நோயாளிகளைப் போய் சந்திக்கலாம். தேவையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யலாம். இவ்விதமாக பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கும். இன்று மனோதத்துவ நிபுணர்கள் மனச்சோர்வு ஏற்படும்போது ஏதாவது ஆக்கப்பூர்வமான செயல்பாடு

களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்குகிறார்கள். இதுவும் தேவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வேத வசனங்களில் வைத்திருக்கிற ஆலோசனைகளைத்தான் எதிரொலிக்கிறது.

## IV. நம் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தேவனிடத்தில் தெரியப்படுத்த வேண்டும்

பிரியமான வாலிபர்களே, நம் வாழ்க்கையில் பிரச்சனைகள் ஏற்படும்போது நம் நண்பர்களிடம் தெரியப்படுத்துகிறோம், உறவினர்களிடம் தெரிவிக்கிறோம் அதனால் தீர்வு உண்டாவதில்லை. அப்படியே தீர்வு உண்டானாலும் அது பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிற நம் ஆத்துமாவை அகல பாதாளத்தில் தள்ளுகிற தீர்வாகத்தான் இருக்கிறது. மனோதத்துவ ரீதியாக நம் கவலைகளை பிரச்சனைகளை நமக்குள்ளேயே அடக்கி வைக்காமல் பிறரிடம் பகிர்ந்துகொள்வது, தெரியப்படுத்துவது பாரத்தைக் குறைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் யாரிடம் தெரியப்படுத்துகிறோம் என்பது முக்கியம். சில வேளைகளில் நம் பிரச்சனைகளைப் பிறரிடம் தெரிவிக்கும்போது அது மற்றுமொரு மிகப்பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்துவிடுகிறது. எனவே தான், நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தும்போது நல்ல தீர்வு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் பாரம் இறங்கிவிடுகிறது. நவீன மனோதத்துவம் ஒருவர் தியானத்தில் ஈடுபடுவது அவருடைய மனநலத்திற்கு இன்றியமையாதது என்று சொல்கிறது. ஆனால், மனித உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் தேவையானவைகளை தேவன் வேத வாக்கியங்களில் ஆரம்பத்திலேயே அறிவித்துவிட்டார்.

பிரியமான வாலிப உள்ளங்களே, இன்றைய நாட்களில் மனநலம் என்பது உலக மக்களால் அதிகமாக பேசப்படும் விஷயமாக இருக்கிறது. மனநலத்தை மேம்படுத்த மனோதத்துவ நிபுணர்களை நோக்கி ஆட்டு மந்தையைப்போல் படையெடுத்துச் செல்லும் இந்த நாட்களில் மனித மனநலத்திற்காக, அதன் மேம்பாட்டிற்காக தேவன் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் வைத்திருக்கின்ற ஆலோசனைகளை ஏற்று நடந்தால் மனநலமும் மேம்பட்டு, நம் ஆத்துமாவுக்குத் தேவையான ஆகாரமும் தங்குதடையின்றி கிடைத்து நம் ஆத்துமா வாழ்வது போல் நாம் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்போம் ( II யோவான் 2 ). ●

சிறுவர் பகுதி

# மீனின் வயிற்றிலே ....

Dr. ஏபில் நாயகம்

பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். உங்களில் சிலர் அதிக மழையினால் ஏற்பட்ட பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பீர்கள். உங்களுக்காக நாங்கள் சிறப்பு ஜெபம் செய்தோம். சபையாக முன்வந்து எங்களாலான உதவிகளையும் செய்தோம். எங்களுடைய ஜெபத்திலே உங்கள் நலனுக்காகவும் வேண்டுதல் செய்து கொண்டிருக்கிறோம். சரி, இந்த மாதத்திற்கான அறிவுரை என்னவென்று பார்க்கலாமா ?

பழைய ஏற்பாட்டில் யோனா என்ற தீர்க்கதரிசி இருந்தான். அவன் அமித்தாயின் குமாரன். யோனா வாழ்ந்த காலத்தில் **நினிவே** என்ற ஒரு மகா நகரம் இருந்தது. அந்த மகா நகரம் பாவத்தினால் நிறைந்திருந்தது. எனவே, தேவன் அவர்களை எச்சரிக்கும்படியாக யோனாவை அனுப்பச் சித்தமாயிருந்தார். ஆனால், யோனாவோ, நினிவே பட்டணத்திற்குப் போகத் துனியாமல் தர்ஷீசுக்கு ஓடிப்போக ஒரு கப்பலில் ஏறினான்.

யோனோவை தேவன் நினிவே நகரத்திற்கு போகச் சொன்னார். ஆனால் அவனோ, தர்ஷீசு என்ற பட்டணத்திற்கு ஓடிப்போனான். எனவே, யோனா மீது தேவன் கோபம் கொண்டார். அவன் சென்ற கப்பல் உடையும்படி பெரிய கொந்தளிப்பை கடலிலே உண்டாக்கினார். பின்னர் கப்பற்காரர்களால் தூக்கி கடலிலே போடப்பட்டான். அவன் கடலிலே ஒரு பெரிய மீனின் வயிற்றிலே இராப்பகல் மூன்று நாள் இருந்தான் ( யோனா. 1 : 17 ). இது தான் யோனாவிற்கு கிடைத்த தண்டனை. தேவனுடைய கட்டளையை மீறினதினாலே அவனுக்கு இந்த தண்டனை கொடுக்கப்பட்டது.

அதற்கு பின், யோனா தன் தவறை உணர்ந்து மீனின் வயிற்றிலிருந்து தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.

தேவன் அவன் மனந்திரும்புதலை ஏற்றுக்கொண்டு அந்த பெரிய மீனுக்கு, யோனாவை தரையிலே கக்கிப்போட கட்டளையிட்டார். அதற்குப் பிறகு யோனா எழுந்து தேவன் கட்டளையிட்டபடி நினிவேவிற்கு போய் பிரசங்கித்தான். அந்த மகா நகரத்தின் மக்கள் அனைவரும் தங்கள் தவறுகளை உணர்ந்து நல்ல கிரியைகளை செய்யத் தொடங்கினார்கள். ஆகவே தேவன் அந்தப் பட்டணத்தை மன்னித்தார்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் இரண்டு உண்டு. ஒன்று, தேவனுடைய கட்டளையை மீறும்போது, நம்மை அவர் தண்டிக்கிறார். இரண்டு, நம் தவறை உணர்ந்து மனந்திரும்பினால் அதை மன்னிக்கவும் செய்கிறார். ஆம் நம் தேவன் அன்புள்ள தேவன்! சரி பிள்ளைகளே! இந்த அறிவுரைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நன்மையாக இருக்கும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!!!

## நாளும் நடப்பும்

1. சவுதி அரேபியாவில் முதல்முறையாக பெண்களுக்கு உள்ளாட்சி தேர்தலில் வாக்குரிமை
2. தமிழகத்தில் சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனத்த மழை காரணமாக பெருமளவில் பொருள் சேதம்.
3. பணக்கார நாடுகளின் வேலைகள் மானியம் உலக வர்த்தக அமைப்பு விவாதிக்க இந்தியா வலியுறுத்தல்
4. PSLVC29 ராக்கெட் இம்மாதம் விண்ணில் செலுத்தப்படும் இஸ்ரோ தலைவர் பேட்டி.
5. கூடங்குளம் அணு உலை அடுத்த மாதம் முதல் மீண்டும் இயங்கும்.
6. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

மருத்துவ குறிப்பு

# டெங்கு காய்ச்சல்

இது டெங்கு வைரஸ் கிருமியால் தாக்கப்பட்ட ஒருவருக்கு வரும் காய்ச்சல். இது ஒரு வைரஸ் காய்ச்சல் வகையாகும். "ஏடிஸ் ஏஜிப்டை" என்ற ஒரு கொசு கடிப்பதின் மூலம் வருகிறது.

**தனித்தன்மை :**

இந்த கொசு பகலில் கடிக்கும் கொசு வகை ஆகும். (Day biter).

**காய்சலின் அறிகுறி :**

காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல் வலி, வாந்தி, எலும்பு வலி ஆகியவை முக்கியமான அறிகுறிகள் ஆகும்.

**சிகிச்சைகள் :**

- இதை சாதரணமாக ஏற்படும் சளி, காய்ச்சல் போல தானாகவே குணமாகிவிடும் என்ற அலட்சியம் கூடாது. காய்ச்சல் கண்டவுடன் மருத்துவரிடம் சென்று முறையான சிகிச்சையையும், மருத்துவரின் ஆலோசனைப்படி இரத்த பரிசோதனைகளையும் செய்து கொள்ள வேண்டும்.
- மேலும், டெங்கு காய்ச்சலைக் குணப்படுத்தவும் தடுக்கவும் நிலவேம்பு குடிநீர், மலைவேம்பு இலைச்சாறு மற்றும் பப்பாளி இலைச்சாறு ஆகிய சித்த மருந்துகளை பயன்படுத்தலாம்.

**டெங்கு காய்ச்சலைத் தடுக்க :**

- கொசு சுத்தமான நீரில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும். எனவே, நாம் தண்ணீர் சேர்த்து வைக்கும் தொட்டி, பாத்திரங் களை கொசு புகாதவாறு பாதுகாப்பாக மூடி வைப்போம்.
- வீடு, பள்ளி, பொது இடங்களை தூய்மையாக வைத்து கொண்டால் மட்டுமே டெங்கு காய்ச்சலைத் தடுக்க முடியும்.

Dr. ஏபில் நாயகம்

# தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்

இந்த பூமியில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பாவத்தைக் குறித்தும் அவனுடைய மீட்பை குறித்தும் அவனுக்கு கிடைக்கப்போகும் நித்திய ஜீவனைக் குறித்தும் தெள்ளத் தெளிவாக எடுத்து கூறுவது நம்முடைய வேதாகமம் மாத்திரமே. இப்படி சிறப்பு பெற்று இருக்கிற நம்முடைய கிறிஸ்தவம் இன்றைய நாட்களில் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து வருகிற அநேக பிரிவினை சபைகளின் கள்ளபோதகர்களின் கையில் சிக்கி வருமானத்திற்காக அதை படாத பாடு படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். கிறிஸ்தவம் இன்று உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கிற ஒரு நோயாளியைப் போல் இருக்கிறது.

இன்றைய மத உலகில் கிறிஸ்தவம் என்றால் மக்களுடைய மனதில் ''அற்புதம்'' பிரதான இடத்தைப் பிடித்து இருக்கிறது. ஏனென்றால் வாரத்தில் ஏழு நாளும் அற்புத சுகமளிக்கும் கூட்டம் என்று வைத்து பிசாசின் கட்டு, பில்லி சூன்யம் எடுக்கப்படும், தீராத நோயிலிருந்து விடுதலை தருவோம் என்று வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள் போதாத குறைக்கு தொலைக்காட்சியில் தினந்தோறும் எங்கு திரும்பி னாலும் ''அற்புதம் தான்'' பிரதான தொழிலாக இருக்கிறது. எனவே இந்த கட்டுரையின் மூலம் ''அற்புதம்'' என்பது என்னவென்றும் அதை இன்றைக்கும் செய்ய முடியுமா என்பதை வேத வாக்கியங்களின் துணை கொண்டு ஆராய்ந்து பார்த்து கற்றுக் கொள்வோம். ஏனென்றால் நம்முடைய வேதாகமம் ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்து கொள்ளுங்கள்'' ( 1தெச. 5:21) என்று அறிவுறுத்துகிறது.

**அற்புதம் என்றால் என்ன?**

அற்புதம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது எந்த மனிதனும் அந்த காரியத்தை செய்ய முடியாததாக இருக்க வேண்டும். தேவன் தம்முடைய வல்லமையை தாம் தெரிந்து கொண்ட மனிதர்களைக் கொண்டு இயற்கையின் சட்டத்திற்குப் புறம்பாக செய்வதுதான் அற்புதமாகும்.

உதாரணமாக : தண்ணீர் இரத்தமாக மாறியது ( யாத். 7:17,18) தண்ணீர் திராட்ச ரசமாக மாறியது ( யோவா 2:1-10). இதை எந்த மருத்துவ உலகமும், விஞ்ஞான உலகமும் இன்றைக்கும் என்றைக்கும் செய்ய முடியாது. ஆனால், தேவன் தம்முடைய தாசர்களைக் கொண்டு (மோசே, இயேசு கிறிஸ்து) எல்லார் கண்களுக்கு முன்பாக செய்திருக் கிறார். இந்த அற்புதங்களை இன்றைக்கு பொய்யான அற்புதங்களை செய்யக் கூடிய கள்ள போதகர்களால் நிச்சயமாகச் செய்யமுடியாது.

இன்றைக்கு அற்புதம் என்று எதைச் சொல்கிறார்கள். தலைவலி, கைவலி சுகமானது ஜலதோசம், காய்ச்சல் சரியானது, கட்டி கரைந்தது, இடுப்பு வலி சரியானது. காது கொஞ்சம் கேட்காமல் இருந்தது இப்போது கொஞ்சம் பரவாயில்லை என்ற ரீதியில் சொல்கிறார்கள். இதை சாதாரண மருத்துவரே குணப்படுத்த முடியுமே. மருத்துவரே இதைக் குணப்படுத்த முடியும் என்றால் மருத்துவரும் தேவனும் ஒன்றாகி விடுவார்களே. இதை நாம் எப்படி அற்புதம் என்று சொல்ல முடியும். நீங்களே இந்தக் காரியங்களை யோசித்துப் பாருங்கள்.

**வேதாகமம் சொல்லும் அற்புதங்கள்**

நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் தேவன் செய்த அற்புதங்களின் சில பட்டியலை கவனமாகப் பாருங்கள். இன்றைக்கு இதே போல் யாராவது செய்கிறார்களா அல்லது செய்ய முடியுமா என்று தேடிப்பாருங்கள்.

**அற்புதங்களின் பட்டியல் இதோ**

- மோசேயின் கோல் சர்ப்பமானது ( யாத். 4:3)
- மோசேயின் கை வெண்குஷ்டம் பிடித்து பின்பு அந்த நொடியே சுகமானது (யாத். 4:6)
- பத்து வாதைகள் (தண்ணீர் இரத்தமாக மாறினது உட்பட) (யாத். 7:17, 8:3, 8:16, 8:21, 9:3, 10,18,10:4, 22 11: 10)
- இஸ்ரவேல் ஜனங்களோடு பகலிலே மேக ஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸதம்பமும் கூட சென்றது (யாத். 13:22)
- செங்கடல் இரண்டாக பிளந்து இஸ்ரவேல் ஜனங்கள் வெட்டாந்தரை வழியாக நடந்து போனது (யாத். 14:21, 22)
- வானத்திலிருந்து மன்னாவை கொடுத்து இலட்சக்கணக்கான மக்களை அனுதினமும் போஷித்தது ( சுமார் 40 வருடங்கள் )

- நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் நடந்தும் அவர்கள் அணிந்திருந்த வஸ்திரம் பழையதாய் போகாமலும் கால் வீங்காமலும் இருந்தது (உபா 8:4 )
- யோர்தான் நதி இரண்டாக பிரிந்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு வழி விட்டது (யோசு. 3 :13-16 )

**கிறிஸ்து செய்த அற்புதங்கள்**

- தண்ணீர் திராட்ச ரசமாக மாறினது (யோவா. 2:1-10)
- இயேசு கிறிஸ்து குஷ்டரோகிகளையும் பிறவி குருடர்களையும், முடவர்களையும், மரித்தவர்களையும் சுகப்படுத்தியதும், உயிரோடு எழுப்பியதும் (மத். 9:1-7, 18:25, 9:32-35 மாற் 3:3-5, லூக். 7:1-10)
- மரித்து அடக்கம் பண்ணப்பட்ட லாசருவை நான்கு நாட்களுக்கு பிறகு உயிரோடு எழுப்பியது (யோவா. 11:11-46)
- தண்ணீர் மீது இயேசு கிறிஸ்து நடந்ததும், காற்றையும், கடலையும் அதட்டி அமைதிப்படுத்தியது (மத். 14:24-26 மாற் 4:39)
- ஏழு அப்பங்களையும் சில மீன்களையும் கொண்டு நாலாயிரம் பேரை போஷித்ததும், ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஏறக்குறைய ஐயாயிரம் பேரை போஷித்தது (மத். 15:33-38, லூக். 9:12-17)

**கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்கள்**

- பேதுருவும், யோவானும் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த மனுஷனை சொஸ்தபடுத்தினார்கள் (அப். 3:2-10)
- பேதுருவின் நிழல்பட்டு அநேகர் சுகமானார்கள் (அப். 5:14, 16)
- எருசலேமில் வாசம் பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி அப்போஸ்தலர்கள் வெளியரங்கமான அற்புதங்களைச் செய்தார்கள் (அப். 4:16)
- பவுலுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் வியாதிக்காரர் மேல் போட்டவுடன் வியாதிகள் குணமானது. (அப். 19:12)
- மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தவனாக எடுக்கப்பட்ட ஐத்திகுவை பவுல் உயிரோடு எழுப்பியது. (அப். 20:9)
- மரித்துப்போன தொற்காளை பேதுரு உயிரோடு எழுப்பியது. (அப். 9:36-42)

✦ விரியன் பாம்பு கடித்தும் ஒரு சேதமும் பவுலுக்கு வரவில்லை. (அப். 28:3-6)

நம்முடைய வேதாகமம் இப்படியாக அற்புதங்களை சொல்லிக் கொண்டே போகிறது. இந்த அற்புதங்களை இன்றைக்கு யாராவது செய்ய முடியுமா? சர்வ நிச்சயமாக யாரும் செய்ய முடியாது. மேலே சொல்லப்பட்ட காரியங்கள் தான் அற்புதம் என்று நம்முடைய வேதாகமம் கூறுகிறது.

**அற்புதங்கள் இரட்சிப்போடு தொடர்புடையது**

புதிய ஏற்பாட்டு பகுதியில் அற்புதங்கள் நடக்கும் போதெல்லாம் பெரும்பாலான இடங்களில் ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள் வேத வசனங்களை பாருங்கள்.

✦ கானாவூர் கலியாணத்தில் தண்ணீர் திராட்ச ரசமாக மாறினபோது அநேகர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள் (யோவா 2:11, 23)

✦ மரித்த லாசருவை இயேசு கிறிஸ்து நான்கு நாட்களுக்குப் பிறகு உயிரோடு எழுப்பினபோது அநேக யூதர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். (யோவா. 11:45, 12:10)

✦ கிறிஸ்துவின் சபையானது வல்லமையோடு எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டபோது சுமார் மூவாயிரம் பேர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2:41)

✦ தாயின் வயிற்றில் சப்பாணியாய் பிறந்த மனிதனை பேதுருவும் யோவானும் சுகப்படுத்தினபோது வசனத்தைக் கேட்டு ஐயாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 5:14)

✦ அனனியா, சப்பீராளின் மரணத்தின் போது அநேகருக்குப் பயமுண்டாகி, திரளான புருஷர்களும், ஸ்தீரிகளும் இரட்சிக்கப் பட்டார்கள் (அப். 5:14)

இப்படியாக வசனம் சொல்லிக்கொண்டே போகிறது. எனவே அற்புதங்கள் நடக்கும் போதெல்லாம் பெரும்பாலான இடங்களில் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பைக் குறித்து எபிரெய ஆசிரியர் முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதி யாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து

கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பை குறித்து நாம் கவலையற்று இருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் ( எபி. 2:3, 4) என்று கேட்கிறார்.

மேலும், யோவான் அப்போஸ்தலன் என்ன கூறுகிறார் என்று பாருங்கள். இந்த புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டு இருக்கிறது (யோவா 20:30, 31) என்கிறார்.

எனவே, கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்த வசனங் களை நாம் உற்று நோக்கும் போது ஓர் உண்மை புலப்படும். அது என்னவென்றால் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அவர் அளித்த இரட்சிப்பையும் மக்கள் ஏற்றுக் கொள்வதற்காகத்தான் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்திருக்கிறார் என்று நாம் உணர்ந்து கொள்ள முடியும். இதை இவ்வசனம் உறுதிப்படுத்துகிறது. நம்முடைய இரட்சிப்புக்குத் தேவையான வசனங்களும், ஆதாரங்களும் நம்மிடத்தில் உண்டு (வேதாகமம்) இவ்வேத வசனங்களை விட்டு விட்டு இன்னமும் நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காண வேண்டும் என்று பரிசேயர், சதுசேயர் போல அவிசுவாசமாக கேட்டுக் கொண்டு இருக்காமல் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள வேத வாக்கியங்களை ஆராய்ந்து (யோவா 5:39) பாருங்கள்.

மேலும், அற்புதங்களைக் கண்டு மாத்திரம் ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளும் தேவனுக்குள்ளும் நிலைத்திருக்க முடியாது. தேவனுடைய பலத்த கரத்தினால் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ணாரக் கண்ட இஸ்ரவேல் ஜனங்கள் பிற்பாடு அவிசுவாசமாய் போய் வனாந்தரத்தில் எல்லாரும் அழிக்கப்பட்டு கானான் தேசத்தை காணாதபடி மரித்துப் போனார்கள்.

புதிய ஏற்பாட்டு பகுதியில் இயேசுகிறிஸ்துவோடு கூட இருந்து பல அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்களால் கண்டு உணர்ந்த தோமா பிற்பாடு கிறிஸ்து உயிர்ந்தெழுந்த போது அவரு டைய விலாவிலே கையை போட்டு பார்த்தால்தான் விசுவாசிப்பேன் (யோவா 20:25) என்று கூறியதையும் நாம் மறக்க முடியாது.

# கனிகளைக் கொடுக்க வேண்டும்

Bro. பாஸ்கர்

அன்பான வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான இரக்கத்தினாலே இந்த வருடத்தின் இறுதி மாதத்தில் இருக்கிறோம். அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை என்பதையே காட்டுகிறது என்றாலும் அவருடைய இரக்கத்திற்கும் ஒரு எல்லை இருக்கிறது. ஆம் தேவன் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கிறார் என்பதற்கு ஒரு உவமையை இயேசு கிறிஸ்து சொன்னார். அதை இம் மாதத்தில் படித்து ஒவ்வொரும் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுப்போம்.

## I. உவமை

அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் என்றார். அப்பொழுது அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒருவன் தன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான். அவர் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் கானவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி இதோ மூன்று வருஷமாய் இந்த அத்தி மரத்திலே கனிகளைத் தேடி வருகிறேன். ஒன்றையுங் காணவில்லை. இதை வெட்டிப்போடு. இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன் ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும். நான் இதைச் சுற்றிலுங்கொத்தி எரு போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றார் (லூக்கா. 13 : 6 - 9).

## II. கனிகளைக் கொடுக்கும்படி தவணை காலம் கொடுக்கப் பட்டது.

இந்த உவமையில் வரும் அத்தி மரத்திற்கு மூன்று வருடகாலம் தவணைக்காலமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் கனிகளைக் கொடுக்கவில்லை. அதாவது இலைகளுள்ள மரமாக அடர்த்தியாக பசுமையாக இருந்திருக்கலாம் ( மத். 21 : 19 ). அநேகர் இந்த அத்தி மரத்தைப்போல வாழ்கின்றார்கள். இந்த அத்திமரம் மாயையான

வாழ்க்கையை வாழ்ந்து வருவது போல வேதபாரகர், பரிசேயர் போன்றவர்கள் பக்திமான்களைப் போல காட்சியளித்து உல்லாச வாழ்விலே உலகப் பாரம்பரியங்களைக் கைக்கொண்டு வருவதைக் காணலாம். இன்றும் சிலர் தங்களின் பாவங்களை மறைக்க சபை காரியங்களில் ஈடுபட்டு சபைக்கு நன்மை செய்வதாகக் கூறி சபைக்கு வரும் இளம் பெண்களிடம் லாவகமாகப் பேசி சபையில் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்கி வருவதைக் காணலாம். இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் மனந்திரும்பும்படியாக தவணைக்காலம் கொடுக்கப்பட்டுள்ளது. மனந்திரும்பாத பட்சத்தில் இருந்தால் ஆண்டவர் கூறுவது என்னவென்றால் மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ! என்கிறார் ( மத். 23 : 15 ). ஐயோ என்றால் தண்டனைக் காலத்தைக் கூறுகிறார்.

அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார் அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் ( அப். 17 : 30 ) என்கிறார். ஞானஸ்நானத்தைத் தள்ளிப்போடும் அன்பு நண்பரே, இந்த தவணைக்காலத்தைப் பயன்படுத்தி மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கவும், இல்லையென்றால் வெட்டப்படும் ஆபத்து காத்துக்கொண்டு இருக்கிறது ( லூக். 13 : 7 ). இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்றார் யோவான் ஸ்நானன் ( மத். 3 : 10 ). எனவே இந்த தவணைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### III. கனி கொடுக்கும்படி தவணைக் காலம் நீட்டிக்கப் பட்டுள்ளது.

இந்த உவமையில் வரும் அத்தி மரத்திற்கு இன்னும் ஓராண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது ( லூக். 13 : 8, 9 ). அது போல நமக்கும் இந்த புதிய வருஷம் கொடுத்து நீட்டிக்கப்பட்டுள்ளது. ஐயா இந்த வருஷமும் இருக்கட்டும் என்று நம் ஆண்டவர் இயேசு தேவனிடத்தில் பரிந்து பேசி இந்த புதிய ஆண்டும் 2016 கொடுத்துள்ளார். கடந்த தவணைக் காலத்தை வீணாக்கினவர்கள் இந்தப் புதிய ஆண்டில் காலத்தை பயன்படுத்தவும். ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளா

னதால் காலத்தைப்பிரயோஜப்படுத்திக் கொள்ளுங்கள் ( எபே. 5 : 15 ,16 ). இன்னும் ஓராண்டு காலத்தை கிருபையாய்க் கொடுத்திருக்கிறார். அதைப் பயன் படுத்திக் கொள்ள புத்தியுள்ளவர் களாயிருப்போம். கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங் கையும் அறியான் ஞானியின் இருதயம் காலத்தையும், நியாயத்தை யும் அறியும் என்று ஞானி சாலமோன் கூறினார் ( பிர. 8 : 5 ). அநுகிர கக்காலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறான் என்று சங்கீ தக்காரர் தாவீது கூறுகின்றான் ( சங். 69 : 13 ). இதோ இப்பொழுதே அனுகிரகக்காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்று அப்போஸ் தலன் பவுல் கூறுகின்றார் ( 2 கொரி 6 : 2 ). எனவே இரட்சிப்பின் வசனத்தைக் கேட்டு விசுவாசித்து மனந்திரும்பி இயேசுவை தேவனு டைய குமாரன் என்பதை அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். பின்பு மரணபரியந்தம் வரை உண் மையாக வாழ வேண்டும். அப்பொழுது ஜீவகிரீடத்தைப் பெற முடியும் ( வெளி. 2 : 10 ). இவைகளைச் செய்யும்படியாக தேவன் காலத்தைக் கொடுத்திருக்கிறார். அதைப் பயன்படுத்து (கொலோ. 4 : 5) இல்லை யேல் அத்திமரம் போல உன்னை வெட்டிப் போட காலம் சமீபத்திருக்கிறது (வெளி. 1 : 3). எனவே இப்பொழுதே மனந்திரும் புதலுக்கேற்ற கனியைக் கொடு. காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஆண்டில் நன்றியாயிருங்கள்.....

- உங்கள் வேலை நீங்கள் நினைத்ததை விட கடினமாயிருந்தால் கூட அதற்காக **நன்றியாயிருங்கள்**. சவரக்கத்தியை வெல்வெட்டைக் கொண்டு தீட்ட முடியாதே.

- நீங்கள் பெற்றுக் கொண்டவைகளில் திருப்தி அடைய வில்லையென்றால், எவைகளிலிருந்து தப்பித்தீர்களோ அதற்காக **நன்றியாயிருங்கள்**.

- பிள்ளைகள் உங்களுக்கு தலைவலியாக இருந்தால்கூட அதற்காக நீங்கள் **நன்றியாயிருங்கள்**. ஏனென்றால், அவர்கள் கர்த்தரால் வந்த சுதந்திரமாயிருக்கிறாரகள்.

- சத்தியம் உங்களை கோபப்படுத்தினாலும்கூட அதற்காக **நன்றியாயிருங்கள்**. ஏனென்றால், அந்த சத்தியம்தான் உங்களை விடுதலையாக்குகிறது.

# உங்களுடைய பக்தியை சோதித்தறியுங்கள்

Bro. Francies David

பரிசுத்த வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் ஒரு சிறிய புத்தகமாக யாக்கோபு எழுதின நிருபம் இந்தாலும், இது நமக்குப் பயன் தரும் பல சிறப்பான செய்திகளைத் தனக்குள்ளாக அடக்கியுள்ளது. கிறிஸ்தவம் ஒரு அன்றாட மார்க்கம் என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது. அநேக சமயங்களில் நாம் நம்முடைய மார்க்கத்தைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறோம். ஆனால், நம்முடைய வாழ்வில் அதை நடைமுறைப்படுத்துகிறோமா? நாம், நமது மார்க்க நீதிகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், நம்முடைய மார்க்கம் வீணான மார்க்கம் என்று யாக்கோபு கூறுகிறார்.

யாக்கோபு 1:26 இப்படிச் சொல்கிறது. " உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தி யுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயி ருக்கும் " ஒரு கிறிஸ்தவனாயிருந்து நாம் மற்றவர்களிடம் பேசும் போது, நம்முடைய மார்க்கம் எதை வெளிப்படுத்துகிறது? ஜனங்களுட னான நம்முடைய அன்றாட பழக்க வழக்கங்கள் எதைப் பிரதிபலிக்கிறது?

நம்முடைய மார்க்கம் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கை மற்றும் அவருடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறபடியால் ஒவ்வொரு நாளும் அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். (யோவா. 14:6) இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவது தான் கிறிஸ்தவமாகும். கிறிஸ்து நம்முடைய அன்றாட வாழ்வில் காணப்படுவாராக!.

யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தில் நாவைக் குறித்து ஆசிரியர் பேசுகிறார். சரீரத்தில் நாவு சிறிய அவயவமாயிருந்தும், அநேக சமயங் களில் அதை அடக்குவது மிகுந்த சிரமம் என்று கூறுகிறார். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளில் வாய்களில் கடி வாளம் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்து கிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளா

யிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப் படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப் பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது; அது அடங் காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயி ருக்கிறது'' (யாக். 3:3-8). எவ்வளவு நேர்த்தியாக யாக்கோபு ஆசிரியர் நாவின் இயல்பைக் குறித்து விவரித்திருக்கிறார் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நாவை உபயோகிக்கும் போது மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண் டும். நாம் மற்றவர்களோடு பேசும்போது, நாம் யார் என்பதை அது வெளிப்படுத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நாவு விஷயத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்'' பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜமுண்டாகும்படி பேசுங்கள் (எபே. 4:29) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

நம்முடைய கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நாவை வீணாக உபயோகித்ததில்லை. ஏனெனில், ''அவர் பாவஞ்செய்யவில்லை, அவ ருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை'' என்று அவரைப் பற்றி எழுதியுள்ளது.(1பேது. 2:22). மேலும், பேதுரு இவ்விதம் கூறுகிறார், ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றி ருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடு களையும் விலக்கிக் காத்து.... (1பேது 3:10) இன்னும் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியரில், ... கிறிஸ்துவின் சுவிசேஷதிற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள் என்கிறார் (பிலி. 1:27).

அடுத்து முக்கியமாக நாம் பார்க்க வேண்டுவது யாதெனில், மற்ற வர்களுடனான நம்முடைய காரியத்தில் நாம் எப்பொழுதும் மிகுந்த

கவனமாக இருக்க வேண்டுமென்பது. தன்னால் ஆனமட்டும், நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாயிருந்து நற்கிரியைகளைச் செய்யும்படியாய் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். எபேசியர் 2:10ல் பவுல் இவ்விதம் கூறுகிறார். ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள், சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்..... நாம் மற்றவர்களோடு பழகும்போது, நம்முடைய ஆளுமை எதைப் பிரதிபலிக்கிறது? நாம் மோசமான , அசிங்கமான மனோபாவம் உள்ளவர்கள் என்று பிரதிபலிக்குமா? இல்லை, நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அல்லது நாம் யாருக்குச் சொந்தமோ அவருடைய தன்மையை அது பிரதிபலிக்கும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது (பிலி.2:5). நமக்கு உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?

கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் (1பேது. 2, தீத்.2:12 14) அவர்கள் வேறுபட்டவர்கள் (2கொரி 6:17) அவர்கள் உலகத்துக்கு வெளிச்சமும், பூமிக்கு உப்புமானவர்கள். இயேசுக்கிறிஸ்து இதை மலைப்பிரசங்கத்தில் சொல்லியுள்ளார். மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. (ஆம், உங்கள் நற்கிரியைகளும், மனுஷரால் பார்க்கப்படும், மறைந்திருக்கமாட்டாது).... தொடர்ந்து, இயேசு, இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது என்றார் (மத். 5:13-14).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியிலே வாழ்ந்த எல்லோரிலும் மேலானவராயிருந்து, மிகச் சிந்த முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை நற்கிரியைகளால் நிறைந்திருக்கிறது. ஜனங்களுடனான அவருடைய பழக்கமும், செயல்பாடும் போற்றுதற்குரியது. எப்பொழுதும் சிறந்ததையே செய்தார். அவருடைய சித்தத்தின் வழியில் நாம் நடப்போமாக! நாம் அப்படிச் செய்வோமானால், கிறிஸ்தவத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க எப்பிரச்சனையும் இராது. நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி, நமக்காகப் பாடுகள் பட்டு, நமக்கு மாதிரியைப் பின் வைத்துப்போயுள்ளார்.

●

## சென்னை, பாண்டி வெள்ள நிவாரணத்திற்கு எங்கள் சபை மற்றும் ஊழியத்தின் மூலம் வழங்கப்பட்ட பொருட்கள்














## எங்களது இதர வெளியீடுகள்

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017







சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்







# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |







## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**







இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண்: 27, காங்கேயம் 638 701
தமிழ்நாடு, இந்தியா

Printed by: K.C. Senthilkumar at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701
Editor: S. Rajanayagam.